# தாயே! தாய்த் தமிழாய் வாழ்க!

மார்ச் 1 தேதி
தமிழர் நாயகன் பிறந்தநாள் !
போராட்டம்
போராட்டக்காரனை
முத்தமிட்டு நாள் !
பெண்ணுரிமைப் பெரியார் என்று
மகளிர் கொண்டாடும் நாள் !



ஒவ்வொரு நொடியும்
உன் ஆட்சி
பலாச்சுளை !
வழிந்தோடும்
கருணையின்
பால் சுனை !
கலை உலகில்
நீ புகழ் தொட்டாய்
நாடகம்,திரைப்படம், சின்னத்திரை !
கொடியேற்றி
நீ நடந்தத்
தொலைவு
நீலத்திரை !

சாதி மத வெறியை
வேட்டையாடும்
ஈரோட்டு
வேங்கை நீ !
பாறைகளுக்குள் ஓடும்
தண்ணீர் சாலைநீ
காலைஉணவுதந்து
படிஎன்றபாடசாலை நீ !
தில்லியால்
கட்டுபடுத்த முடியாது
ஆழ்ந்தக் காற்றழுத்த
கடல் பகுதி நீ !
உன் மீது
கல் வீசுகிறவருக்கும்
இனிக்கும்
திராட்சை நீ !
இரும்பின் தொன்மை ,
பொருநை
நம் பெருமை ,என்ற
கலங்கரை விளக்கு நீ !

நெருப்பு உருக்க
சுத்தியல்
ஓங்கி அடிக்க
உருவான வாளே !
பத்தும்பகை
என்றாலும்
சுத்தம் செய்யும் நீ
வெற்றித் திருநாளே !
அது
நட்சத்திரங்கள் அல்ல
நீ தாண்டிய
அவமானங்கள் !
அவர்கள்
அவதாரங்கள்!

நீ கீழடி
ஆதாரங்கள்!
வறண்டதே இல்லை
உன் வயல்கள் !
குறைந்ததே
இல்லை
உன் மழைகள் !
உன் கால்கள்
போர்கருவி
தளவாடங்கள்!
சிகை கொற்றன்
கண்ட
தமிழித் தாங்கும்
தண்டவாளங்கள்!
தஞ்சைக்கு
காவிரி வாசல் நீ ! மதுரைக்கு
வாடி வாசல் நீ !

எவர் கையையும்
விட்டு விடாத
கைப்பேசி நீ !
சரியான முகவரியில்
நல்லதைச்சேர்க்கும்
தபால் நீ !
சமூக நோய் தடுக்கும் தடுப்பூசி
நீ !
பூக்களைக் கொண்டு
புரட்சி நடத்துகிறவன்
நீ !
குளத்தின்
ஆம்பல் கொடி நீ !
பெரியார் அண்ணா
குலத்தின்கொடிநீ !
நரிகளின்
ஊளையை
ஊதித்தள்ளும்
கர்ஜனை நீ !
வளர்பிறை
வியக்கும்
வளர் சூரியன் நீ !
தமிழ் நாடு
கூட்டணியை
அரவணைப்பதில்

அறிஞர் அண்ணா !
ஒன்றிய கூட்டணியில்
கலைஞராய் தெரிகிறாய் நீ நின்னா !

திருக்குவளை
வாசி !
மீண்டும் முதல்வராகி
பதவி ஏற்பை
வாசி !
கார்ல் மார்க்ஸ் சிலை
பொதுவுடைமைப்
பேசும்!
வி.பி.சிங் சிலை
சமூக நீதி பேசும் !
சர் ஜான் ஹுபர்ட் மார்சல் சிலை
சிந்து சமவெளி ஆய்வுப் பேசும் !
ஆனால் சிலைகள் உந்தன்
பெயரைப் பேசும்!

ஒவ்வொரு ஊர் சாலைக்கும் பெருமை
அங்கே
நீ களமாடியதை
எண்ணி!

மழையில் வீடு மூழ்கியது
மனக்கவலையோ?
உன்னோடு எடுத்தப் புகைப்படத்தை
எண்ணி !
திருமண நாள்
வேட்டிச் சட்டையை விட
தொட்டு மகிழ்கிறேன் நீ மேடையில்
அணிவித்தத் துண்டை எண்ணி!
பிங்க் ஆட்டோ வால்
பெண்கள் கையில்
வருவாய் கொடுக்கிறாய் !
யாவரும் வியக்கும்படி
ரூ.5000 ஆயிரம்
வங்கி மூலம்
கொடுத்தாய் !

இங்கிலாந்து
ஆக்ஸ்போர்டு
பல்கலைக்கழகத்தில்
பெரியார் படம்
திறந்தாய் !
உன்னோடு
களத்தில் இருப்பது
இருந்து பூவாசம் !
தொண்டர் குடும்பத்திற்கு
நீ தரும்10 இலட்சம்நிதி
தாய்ப் பாசம் !
அனைத்துலக
வள்ளலார் மாநாடு !
இதயமெல்லாம்
தேனின் பூக்காடு !

தூய்மைப் பணியாளர்களுக்கு
பசி போக்க
திட்டம் தந்தாய்நீ !
தோழி விடுதி
அன்புச் சோலை
அன்புக் கரங்களின்
திட்டத்தால்
நிறைந்தாய்நீ !

இலக்கைத் தொட
ஒரு ஆண்டில் 71,000 கி.மீ
(44,000 மைல்கள்)
பறக்கும்
வடமுனைஆலா பறவை
நீ !
அட்லாண்டிக் கடலில்
பெர்முடா முக்கோணத்திலும்
வெல்லும்
கப்பலோட்டி நீ !
உன்
சாதனைகள் பேசும்
இந்தோனேசியாவின் சுலவேசி குகை
ஓவியம் நீ !

வெனிசுலாவின் ஏஞ்சல் நீர்வீழ்ச்சி
புகழின் உயரத்தில் நீ !
4,192 திருக்கோயில்
குடமுழுக்கு நடந்தது !
திருக்கோயில் சார்பில்
2,800 திருமணங்கள் நடந்து சிறந்தது
!

இமைகளில்
சுரம் வடிப்பவன்
நீ !
அருவியாக விழுந்தவுடன்
நதியாக நடப்பவன்
நீ !
மகளிருக்காக
காத்திருக்கும்
விடியல் பயணப்
பேருந்து நீ !
வீட்டுக்கதவைத் தட்டி
கலைஞர் உரிமைத் தொகை தரும்
தாய்க்குலத்தின்
தலை மகன் நீ !
தமிழ் உட்பட ஏழு மொழி
படைப்புகளுக்கு
"செம்மொழி இலக்கிய விருது "
தமிழுக்கு முடிசூட்டினாய் நீ !
உன் சாதனைகளால்
என்றும்
முதலமைச்சர் நீ !
மொழிகளின்
தாயாய்
தமிழாய்
வாழ்க! வாழ்க! நீ !

**ஈரோடு இறைவன்**
இணைச் செயலாளர்
தி.மு.க
இலக்கிய அணி



# மக்களின் முதல்வரே... நீடூழி வாழ்கவே!

முத்தமிழ் செதுக்கிய
அரசியல் கலையே,
அரசியல் ஆசானின்
கரத்தில் வளர்ந்தவரே!



நீர் முதல்வர் ஆனதால்,
திறன் பயிற்சி சான்று பெற்று,
"நான் முதல்வன்" ஆனேன்;

மேனாள் முதல்வர்களின்,
மதிய உணவுத் திட்டத்துடன்,
"காலை உணவு" அளித்து
மாணவர்களை மகிழ்வித்தீர்;

கல்வி கற்றிடும்,
பணிக்குச் செல்லும்,
அனைத்து மகளிரும்
பயணித்திடவே
"விடியல் பயணம்"
அமைத்துத் தந்தவரே;

அரசுப் பள்ளிகளில்
மேனிலை முடித்த,
"தமிழ்ப் புதல்வன்"
"புதுமைப் பெண்" ஐ
மேலும் கற்க
வழிகோலியவரே;

அறிவியல் உலகில்
ஒவ்வொரு தேடலும்,
இணையவழி இணைந்து,
கற்றிட. தெளிந்திட
"உலகம் உங்கள் கையில்" என,
மாணவர்களுக்கு
மடிக்கணினி வழங்கியவரே;

ஆணாதிக்க உலகினிலே,
மகளிரும் சுயமரியாதையுடன் வாழவே,
"மகளிர் சுய உதவிக்குழு" விற்கு,
வங்கிக் கடன் கொடுத்து உதவியவரே;

எங்கள் கோரிக்கை மனுவினை
பரிவோடு ஆராய்ந்து
"உங்களுடன் ஸ்டாலின்"
துணையிருப்பேன் என்றவரே;

"இல்லம் தேடிக் கல்வி" தந்து,
"மக்களைத் தேடி மருத்துவம்" செய்து,
வயோதிகர் வீடு சென்று
உணவுப் பொருள் தரும்
"தாயுமானவரே"

மக்கள் நலன் காப்பதில்
"முதல்வர்" நீர்;
மக்களுக்குச் சேவை செய்வதில்
இந்தியாவிலேயே
"முதல்வர்" நீர்;
அகில இந்திய அரசியலிலும்
"முதல்வர்" நீர்;
தேர்தல் களத்திலும்
"முதல்வர்" நீர்;
தமிழகத்தின் அடுத்த
"முதல்வரும்" நீர்தான்

நீர் வாழ்க பல்லாண்டு என
மனதார வேண்டுகிறேன்!

**எம். ஜாகீர் உசேன்**



## கழகத் தலைவர் – முதல்வர் மு.க.ஸ்டாலின் பிறந்தநாள் விழா!

# 112வது வட்டக் கழகம் சார்பில் கழகக் கொடியேற்றி இனிப்பு வழங்கல்!

### மு.க.தமிழரசு – நே.சிற்றரசு – நா.எழிலன் பங்கேற்பு! வரதை த.பரி தலைமை!

சென்னை பிப். 28-

மார்ச்-1ல் பிறந்தநாள் விழா காணும் கழகத் தலைவர் - தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களின் பிறந்தநாள் விழாவை முன்னிட்டு ஆயிரம் விளக்கு மேற்குப் பகுதி 112வது வட்டக் கழகம் சார்பில் அனைத்து இடங்களிலும் கழக கொடியேற்றி இனிப்பு வழங்கி ஒலி பெருக்கி நிகழ்ச்சி நாளை (01.03.2026 - ஞாயிற்றுக்கிழமை) காலை 9.00 மணியளவில், டிரஸ்ட்புரம் 6-வது தெரு சந்திப்பில் நடைபெறுகிறது.

வரதை த.பரி நிகழ்ச்சிக்கு தலைமை வகிக்கிறார்.

மு.க.தமிழரசு, சென்னை மேற்கு மாவட்டச் செயலாளர் நே.சிற்றரசு, ஆயிரம் விளக்கு தொகுதி சட்ட மன்ற உறுப்பினர் மருத்துவர். நா. எழிலன், ஆயிரம் விளக்கு மேற்கு பகுதிச் செயலாளர் வினோத் வேலாயுதம், சென்னை மேற்கு மாவட்ட பொருளாளர் ஜெ.எஸ்.அகஸ்டின் பாபு, பொதுக்குழு உறுப்னிர் டி.ஜோஸ் டேனியல் ஆகியோர் கழகக் கொடியேற்றி இனிப்பு வழங்குகின்றனர்.

இதில் எம்.ஏ.ஜெஸ்டின், புவி பாலாஜி, என்.பி.இதயாத் பாட்சா, எலிசபத் அகஸ்டின் எம்.சி., எஸ்.பார்த்திபன், த.ஐசன்ட், எஸ்.மனோகரன், வி.பொன்சீலன், ஜெனரேட்டர் ராஜ், எஸ்.பொற்கொடி, வி.ராஜி, எஸ்.சக்கரவர்த்தி, எல்.முருகன், பி.பாலாஜி, பி.சிவா, இ.ஜான் உள்ளிட்ட பலர் கலந்து கொள்கின்றனர்.

எனவே மாவட்ட கழக அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், இளைஞர் அணி பாக தலைவர்கள், மகளிரணி, மற்றும் கழக முன்னோடிகள் அனைவரும் கலந்து கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு வட்டக் கழகச் செயலாளர் வரதை த.பரி கேட்டுக் கொண்டுள்ளார்.

## சென்னை மயிலாப்பூரில் இன்று

# கிராமக் கோயில் பூசாரிகள் மாநாடு - முதல்வர் மு.க.ஸ்டாலின் நல உதவிகள் வழங்கி விழா பேருரை!

## அமைச்சர் பி.கே.சேகர்பாபு தகவல்!

சென்னை, பிப். 28-

கிராமக் கோயில் பூசாரிகள் மாநாடு இன்று (28.02.2026) மயிலாப்பூரில் நடைபெறுகிறது. முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் மாதாந்திர ஊக்கத்தொகை மற்றும் நலத்திட்ட உதவிகளை வழங்கி விழாப் பேருரையாற்றுகிறார்.



முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் சென்னை மயிலாப்பூரில் நாளை (28.02.2026) பெறும் கிராமக் கோயில் பூசாரிகள் மாநாட்டில் கலந்துகொண்டு, கிராமக் கோயில் பூசாரிகளுக்கு மாதாந்திர ஊக்கத் தொகை மற்றும் நலத் திட்ட உதவிகளை வழங்கி விழாப் பேருரையாற்றுகிறார் என இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு தெரிவித்துள்ளார்.

இந்து சமய அறநிலையத்துறை, தனது நிர்வாகக் கட்டுப்பாட்டிலுள்ள திருக்கோயில்களுக்கு திருப்பணிகள் மேற்கொண்டு குடமுழுக்கு நடத்துதல், பக்தர்களுக்கு தேவையான வசதிகளை மேம்படுத்தி வழங்குதல், அர்ச்சகர் மற்றும் பணியாளர்களின் நலன் காக்கும் திட்டங்களை செயல்படுத்தி வருவதோடு, நிர்வாகக் கட்டுப்பாட்டில் இல்லாத ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் வசிக்கும் பகுதி திருக்கோயில்களின் திருப்பணிக்கு நிதியுதிவி, கிராமக்கோயில் பூசாரிகளின் நலன் காக்கும் திட்டங்களையும் செயல்படுத்தி வருகிறது.

அந்த வகையில், தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தலைமையிலான அரசு பொறுப்பேற்ற பின், ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் வசிக்கும் பகுதி திருக்கோயில்களின் திருப்பணி நிதியுதிவி எண்ணிக்கை ஆண்டிற்கு 1,250 ஆக உயர்த்தப்பட்டதோடு, நிதியுதவி ரூ. 1 இலட்சத்திலிருந்து ரூ. 2.50 இலட்சமாக உயர்த்தப்பட்டு, இதுவரை 5,000 திருக்கோயில்களுக்கு ரூ. 106.25 கோடி நிதியுதவியாக வழங்கப்பட்டு திருப்பணிகள் நடைபெற்று வருகின்றன. மேலும் கிராமக் கோயில் பூசாரி களுக்கான ஓய்வூதியம் ரூ. 4,000 ஆக உயர்த்தி வழங்கப்பட்டு வருகிறது.

அதன் தொடர்ச்சியாக கிராமக் கோயில் பூசாரிகள் நல வாரியம் அமைக்கப்பட்டு, பூசாரிகளுக்கும் அவர்களது குடும்பத்தினருக்கும் கல்வி உதவித் தொகை, திருமண உதவித்தொகை, குடும்ப நல நிதி, ஓய்வூதியம், குடும்ப ஓய்வூதியம் போன்ற நலத் திட்ட உதவிகள் வழங்கப்படுகின்றன.

இந்நிலையில் சென்னை, மயிலாப்பூரில் நாளை நடைபெறும் கிராமக் கோயில் பூசாரிகள் மாநாட்டில் தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள் கலந்துகொண்டு, கிராமக் கோயில் பூசாரிகளுக்கு மாதாந்திர ஊக்கத்தொகையாக ரூ. 1,500/ வழங்கும் திட்டத்தினை தொடங்கி வைத்து, பல்வேறு நலத்திட்ட உதவிகளை வழங்கி விழாப் பேருரையாற்றுகிறார்.

இவ்விழாவில் அமைச்சர் பெருமக்கள், தவத்திரு ஆதீன பெருமக்கள், பெருநகர சென்னை மாநகராட்சி மேயர், நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், ஆன்றோர் பெருமக்கள், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் கலந்து கொண்டு சிறப்பிக்க உள்ளனர் என இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு தெரிவித்துள்ளார்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### சைதை சம்பத்
### பிப்ரவரி 28 (2025)



**கழகக் குடும்பத்தைச் சேர்ந்த இவர் தனது இளமைப் பருவத்திலேயே கழகத்தில் தீவிர பணியாற்றியவர்.**

**இளைஞர் அணி மன்றச் செயலாளர், பகுதி இளைஞர் அணி அமைப்பாளர், மாவட்ட பிரதிநிதி, சைதை பகுதி துணைச் செயலாளர், 15 ஆண்களுக்கும் மேலாக பொதுக்குழு உறுப்பினர் என கழகத்தில் பல்வேறு பொறுப்புகள் வகித்தவர்.**


**டி.யூசி.எஸ். தலைவராக பதவி வகித்தவர்.**

**கழகம் அறிவித்த போராட்டங்களில் கலந்து கொண்டு சிறை சென்றவர்.**

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### திருத்துறைப்பூண்டி இர.செல்வராசன்
### பிப்ரவரி 28 (1992)



**திருத்துறைப்பூண்டி நகரச் செயலாளராகவும் – பேரூராட்சி மன்றத் தலைவராகவும் பணியாற்றியவர்.**

**'மிசா'விலும் மற்றும் தலைமைக் கழகம் அறிவித்த சட்ட எரிப்பு உள்ளிட்ட அறப்போராட்டங்களிலும் பங்கேற்றுச் சிறை சென்றவர்.**

**குடந்தை, மகாமகக் குள மரணங்கள் குறித்து நீதிவிசாரணை கோரி, கழகத்தின் சார்பில் நடைபெற்ற கண்டனப் பேரணியில் பங்கேற்றபோது மாரடைப்பால் காலமானார்.**

**"திருத்துறைப்பூண்டி வட்டாரத்தில் கழகச் சிங்கமாக நடைபோட்டு, அடங்காத ஆர்வத்துடன் பணியாற்றிய தம்பி. சாவு முனையிலும் அந்தத் தம்பி கழகப் பணியே ஆற்றியுள்ளார்" என்று தலைவர் கலைஞர் அவர்கள் தமது இரங்கல் செய்தியில் தெரிவித்துள்ளார்.**

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**